Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 106

வியாழக்கிழமை
12 மார்ச் 2026

மாசி 28 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

எரிவாயு விலையேற்ற எதிரொலி

## உணவுகளின் விலை நள்ளிரவுடன் உயர்வு

கொழும்பு, மார்ச் 12
எரிவாயுவின் விலை அதிகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து, உணவுப் பொருள்களின்

»11

## லாப்ஸ் எரிவாயுவும் விலை அதிகரிப்பு!

கொழும்பு, மார்ச் 12
நேற்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் லாப்ஸ் சமையல் எரிவாயுவின் விலை

»11

பருத்தித்துறையில் வெறியாட்டம்

## மருமகன் நடத்திய வாள்வெட்டில் மாமியார் பலி: மாமனார் படுகாயம்

மனைவியும் பிள்ளைகளும் அருந்தப்பு



யாழ்ப்பாணம், மார்ச் 12
பருத்தித்துறை - கிராமக்கோடு பகுதியில், குடும்பத்தலைவர் ஒருவர் நடத்திய வாள்வெட்டுத் தாக்குதலில் அவரது மாமியார் உயிரிழந்ததுடன், மாமனார் படுகாயங்களுக்கு உள்ளாகி உயிருக்கு ஆபத்தான நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவ

»11

## தென்மராட்சியில் ஒரே இரவில் ஐந்து வீடுகள் மீது தாக்குதல்

வன்முறைக் குழு அடாவடி
நான்கு சந்தேகநபர்கள் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 12
தென்மராட்சியில் நேற்று அதிகாலை ஐந்து வீடுகள் மீது அடுத்தடுத்து தாக்குதல் நடத்தப்பட்ட நிலையில், அந்த வன்முறைக் குழுவைச் சேர்ந்த நான்கு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

»10

# கிவில் ஓயா விவகாரம்; வவுனியாவில் ஆராய்வு

நீர்ப்பாசன அமைச்சர் லால்காந்த தலைமையில்
மாவட்டச் செயலகத்தில் இன்று கலந்துரையாடல்

**வவுனியா, மார்ச் 12**
**பொதுமக்களின் பூர்வீக நிலங்களை ஆக்கிரமித்து அமைக்கப்படவுள்ள கிவுல் ஓயா திட்டம் தொடர்பில், வவுனியாவில் இன்று இடம்பெறவுள்ள நீரியல்வள கூட்டத்தில் முழுமையான மீளாய்வு இடம்பெறும் எனத் தெரியவருகின்றது.**

»11

## குளுக்கோமா விழிப்புணர்வு; யாழில் இன்று நடைபயணம்

யாழ்ப்பாணம், மார்ச் 12
குளுக்கோமா எனப்படும் கண் அழுத்த நோய் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், யாழ்ப்பாணத்தில் இன்று நடைபயணம் இடம் பெறவுள்ளது.
லயன்ஸ் கழகத்தின் 12ஆவது சர்வதேச மாவட்டம் மற்றும், எஸ்.ரி.எஸ். மருத்துவமனை

»04



## பாம்பு தீண்டி ஒருவர் சாவு!

மல்லாவியில் துயரம்

முல்லைத்தீவு, மார்ச் 12
முல்லைத்தீவு - மல்லாவி பகுதியில் பாம்பு தீண்டி அரச உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். மாந்தை கிழக்கு பிரதேச சபையின் வருமான பரிசோதகராகக் கடமையாற்றும் திருநாவுக்கரசு கிருபாகரன் (வயது - 55) என்பவரே இவ்வாறு உயிரிழந்த

»10

## மாணவர்களிடம் நிதி சட்டவிரோத அறவீடு

பாடசாலைகளில் தொடர்வதாகக் குற்றச்சாட்டு

விரிவு பக்கம்:- 11

## பொன் அணிகளின் மோதல் இன்று கோலாகல ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 12
யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையிலான, 109ஆவது பொன் அணிகளின் போர் இன்று

»11

ஆசிரியர்களின்


## தேவைகருதிய இடமாற்றங்களை முழுமையாக நடைமுறைப்படுத்துக

அதன் பின்னரே வருடாந்த இடமாற்றம்
வடமாகாண ஆளுநர் அதிரடி உத்தரவு



யாழ்ப்பாணம், மார்ச் 12
வடக்கு மாகாணத்தில் சேவையின் தேவை கருதி ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட இடமாற்றங்களை முழுமையாக நடைமுறைப்படுத்திய பின்னரே, வருடாந்த இடமாற்றங்

»10



"இப்படியே ஒவ்வொண்டா விலையேறி வினையாகப் போகுது கண்டியளோ"

முச்சந்தி முரளி



## வழக்குகளுக்கு முற்படாத 6 பேருக்குப் பிடியாணை!

சொத்துக்களை முடக்கவும் திட்டம்
யாழ். நீதவான் நீதிமன்றம் அதிரடி

யாழ்ப்பாணம், மார்ச் 12
யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் இடம்பெறும் பல்வேறு வழக்குகளில் தொடர்ச்சியாக முன்னிலையாகத் தவறிய ஆறு பேருக்கு

»11

## மின்சாரசபை ஊழியர் போராட்டம் தீவிரம்!

விரிவு பக்கம்:- 02

மண்டைதீவு சுற்றுலா மையத்தில் நிதியிழப்பு

## ஆளுநர் வேதநாயகன் உள்ளிட்ட மூவர் மீது நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவில் முறையீடு

யாழ்ப்பாணம், மார்ச் 12
யாழ்ப்பாணம் மண்டைதீவு சுற்றுலா மையத்தின் உருவாக்கலின்போது, அரச நிதியைத் தவறாகப் பயன்படுத்தியதாகத் தெரிவித்து, வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் உள்ளிட்ட மூவருக்கு எதிராகக் கொழும்பு நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவில்

»11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 11.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4372 |
| ஆங்கில எழுத்து | D |
| வெற்றி இலக்கங்கள் | 02 22 57 70 |
| விசேட எழுத்து | D |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 11.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1439 |
| வெற்றி இலக்கினம் | துலாம் |
| வெற்றி இலக்கங்கள் | 23 37 52 61 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 11.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0398 |
| ஆங்கில எழுத்து | X |
| வெற்றி இலக்கங்கள் | 7 2 5 3 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 11.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2478 |
| ஆங்கில எழுத்து | J |
| சுப்பர் இலக்கம் | 17 |
| வெற்றி இலக்கங்கள் | 05 18 71 73 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 11.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6130 |
| ஆங்கில எழுத்து | R |
| வெற்றி இலக்கங்கள் | 2 4 9 6 5 2 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 11.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2160 |
| ஆங்கில எழுத்து | M |
| வெற்றி இலக்கங்கள் | 05 11 47 58 |
| விசேட எழுத்து | M |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 11.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0246 |
| வெற்றி இலக்கினம் | சிம்மம் |
| வெற்றி இலக்கங்கள் | 04 23 49 |

# மின்சாரசபை ஊழியர் போராட்டம் தீவிரம்!

**கொழும்பு, மார்ச் 12**

**இலங்கை மின்சாரசபையை ஆறு புதிய நிறுவனங்களாகப் பிரிக்கும் அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு எதிராக மின்சாரசபை ஊழியர்கள் முன்னெடுத்துள்ள பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டம் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.**

புதிய நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரிகளுக்கும், மின்சாரசபைத் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் விசேட பேச்சு நடைபெற்றது. இதன் போது ஊழியர்களின் தொழில் பாதுகாப்பு மற்றும் கூட்டு ஒப்பந்தம் உள்ளிட்ட 8 பிரதான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

8 கோரிக்கைகளில் 6 முக்கியமான விடயங்கள் தொடர்பாகத் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் தமக்கு இல்லை என அதிகாரிகள் கைவிரித்துள்ளனர். இது குறித்த இறுதி முடிவை ஜனாதிபதி அல்லது அமைச்சரே எடுக்கவேண்டும் என அவர்கள் தெரிவித்துள்ளனர். எமது கோரிக்கைகளுக்கு முறையான தீர்வு கிடைக்காவிட்டால் போராட்டம் அடுத்த கட்டத்துக்கு நகர்த்தப்படும் என்றும் தொழில் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் வரை போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என்றும் அவர்கள் கூறியுள்ளனர். அதேவேளை ஊழியர்களின் பணிப்பகிஷ்கரிப்புக் காரணமாகப் பழுதுபார்க்கும் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதால் மின் விநியோகத்தை வழமைக்குக் கொண்டுவருவதில் பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. ஊழியர்கள் திருத்தப் பணிகளில் இருந்து விலகியுள்ளதால், மின்சாரத் தடைகளைச் சரிசெய்வதற்கு நீண்ட நேரம் எடுக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## பணப்பரிமாற்றம் 32 வீத அதிகரிப்பு!

கொழும்பு, மார்ச் 12

2025ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில் நாட்டுக்கு அனுப்பப்பட்ட வெளிநாட்டுப் பணப்பரிமாற்றம் 32 சதவீதத்தால் வளர்ச்சியடைந்துள்ளது. இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் வெளியிட்டுள்ள அண்மைய அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2026 ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் மொத்தம் 1,480.1 மில்லியன் அமெரிக்க டொலர் நாட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளது. 2025ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் இது 1,121 மில்லியன் டொலராக மட்டுமே இருந்தது.

வெளிநாடு செல்லும் இலங்கையர்களின் எண்ணிக்கையும் வேலை வாய்ப்புத் தேடி வெளிநாடுகளுக்குச் செல்லும் இலங்கையர்களின் எண்ணிக்கையும் தொடர்ந்து அதிகரித்து வருகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## மண்சரிவு அபாயப் பகுதி வீடமைப்பு நிதி அதிகரிப்பு!

கொழும்பு, மார்ச் 12

மண்சரிவு அதி அபாய வலயங்களில் வசிக்கும் குடும்பங்களைப் பாதுகாப்பான இடங்களில் மீளக்குடியமர்த்தும் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிதி உதவியை அதிகரிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. பொருளாதார நிலைமைகள் மற்றும் கட்டுமானப் பொருள்களின் விலை உயர்வைக் கருத்திற்கொண்டு இந்தத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஒரு வீட்டை நிர்மாணிப்பதற்காக இதுவரை அதிகபட்சமாக 1.6 மில்லியன் ரூபா வழங்கப்பட்டது. இனிவரும் காலங்களில் ஒரு வீட்டை அமைப்பதற்கு 2.5 மில்லியன் ரூபா வரை நிதி உதவி வழங்கப்படவுள்ளது. அரசாங்கத்தால் வழங்கப்படும் இந்த நிதி உதவியைக் கொண்டு, பயனாளர்களே தமக்குரிய வீடுகளை நிர்மாணிக்கும் முறையின் கீழ் இந்தத் திட்டம் செயற்படுத்தப்படுகிறது. பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட இந்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ச-இ)



## வெளிநாட்டவர்களுக்கு இலவச விசா நீடிப்பு

கொழும்பு, மார்ச் 12

மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் நிலவும் போர்ப்பதற்றம் காரணமாக, இலங்கையில் சிக்கியுள்ள வெளிநாட்டவர்கள் நலன்கருதி விசாக் காலத்தை எவ்விதக் கட்டணமுமின்றி நீடிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. மத்திய கிழக்கு நாடுகளுக்கான விமானப் பயணங்கள் 2026.02.28 முதல் இரத்துச்செய்யப்பட்டுள்ளன.

இதனால் திட்டமிட்டபடி இலங்கையை விட்டு வெளியேறமுடியாத வெளிநாட்டவர்களுக்கு 14 நாள்கள் வரை எவ்விதக் கட்டணமுமின்றி விசாக் காலம் நீடிக்கப்படும். விமானப் பயணத் தடைகள் தொடருமானால், மேலும் 14 நாள்களுக்கு இலவசமாக விசாவை நீடிக்க அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

இதற்காக எவ்வித மேலதிகக் கட்டணங்களும் அறவிடப்படமாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 11.03.2026 | புதன்கிழமை | 0838 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| P | 4 3 2 8 3 0 | |

| Super Ball DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 11.03.2026 | புதன்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 3104 | K | 33 45 58 61 |

| சனிதா DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 11.03.2026 | புதன்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| G | 05 08 44 75 | 5265 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | தினம் |
| 11.03.2026 | புதன்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 0934 | 05 13 20 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 11.03.2026 | புதன்கிழமை | |
| மிதுனம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 25 42 58 60 | 4816 |

| KAPRUKA DLB | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 11.03.2026 | புதன்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| O | 17 | 06 38 50 62 | 2280 |

| அத கோடிபதி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 11.03.2026 | புதன்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| X | 16 27 43 60 | 2930 |

## மத்திய கிழக்குப் பதற்றம்;

# இலங்கையர்களுக்கு உதவ தூதரகங்களுக்கு விசேட நிதி

கொழும்பு, மார்ச் 12

மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் நிலவிவரும் போர்ப் பதற்றச் சூழலைக் கருத்திற்கொண்டு அங்கு வசிக்கும் மற்றும் பணிபுரியும் இலங்கையர்களுக்குத் தேவையான அவசர வசதிகளை வழங்குவதற்காகத் தூதரகங்களுக்கு விசேட நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

போர்ச் சூழலால் பாதிக்கப்படக்கூடிய அல்லது அவசர உதவி தேவைப்படும் இலங்கையர்களுக்குத் தங்குமிடம், உணவு மற்றும் மருத்துவ வசதிகளை உடனுக்குடன் வழங்க இந்த நிதி பயன்படுத்தப்படும்.

அதேவேளை மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள இலங்கையர்கள் அல்லது அவர்களின் உறவினர்கள் ஏதேனும் அவசரத் தேவைகள் இருப்பின், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் 24 மணிநேர சேவையான அவசர அழைப்பு இலக்கம் (இலங்கை): 1989 > வெளிநாடுகளிலிருந்து: +94 112 439 700 என்பவற்றைத் தொடர்பு கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரசாயன உரப்பாவனையால் உவராகும் கிளிநொச்சி மண்!

## விவசாய ஆராய்ச்சிப் பிரிவு எச்சரிக்கை

**கிளிநொச்சி, மார்ச் 12**
**கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகரித்துவரும் இரசாயன உரப்பாவனை காரணமாக மண்வளம் மிக வேகமாகப் பாதிக்கப்பட்டு, விவசாய நிலங்கள் உவர்த்தன்மையடைந்து வருவதாக மாவட்ட விவசாயப் பணிப்பாளரும், மேலதிக விவசாய ஆராய்ச்சிப் பிரிவுப் பணிப்பாளருமான எஸ். ராஜேஷ் கண்ணா எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

இதுகுறித்து அவர் தெரிவித்ததாவது-
இரசாயன உரங்களை மிதமிஞ்சிப் பயன்படுத்துவதால், வளமான நிலங்களில் பயிர் செய்யமுடியாத அளவுக்கு உவர்த்தன்மையடைந்து வருகின்றது. மனிதர்களுக்கும் மண்ணுக்கும் நீண்டகாலப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய, தடைசெய்யப்பட்ட பூஞ்சை நாசினிகள் மற்றும் கிருமி நாசினிகளைப் பயன்படுத்துவதை விவசாயிகள் தவிர்க்க வேண்டும். தற்போது மாவட்டத்தில் ஒரு ஹெக்ரேயருக்கு அதிகபட்சமாக 5.6 தொன் என்ற அளவிலேயே உற்பத்தி கிடைக்கின்றது. மண்ணின் தரம் குறைந்தால் இந்த அளவு மேலும்வீழ்ச்சியடையும். கழிவு வாய்க்கால்கள் துப்புரவு செய்யப்படாததால், வயல் நிலங்களுக்குள் வெள்ளநீர் பாய்கிறது. இதன் ஊடாகக் களை நெல் மற்றும் பன்றிநெல் போன்ற பயிர்கள் வேகமாகப் பரவிவருகின்றன. ஆகாயத் தாமரை மற்றும் சல்பீனியா போன்ற நீர்வாழ் தாவரங்களும் இவ்வாறான சூழலால் வயல் நிலங்களைச் சூழப் பரவலடைந்து வருகின்றது. எனவே விவசாயிகள் இரசாயன உரங்களுக்குப் பதிலாகப் படிப்படியாகச் சேதன உரங்களைப் பாவிக்க முன்வரவேண்டும். மண்வளப் பாதுகாப்புத் தொடர்பான விழிப்புணர்வு விவசாயிகளிடையே மிக அவசியமானது. களைநெல் பரவலைத் தடுக்கக் கழிவு வாய்க்கால்களை முறையாகத் துப்புரவு செய்து பராமரிக்கவேண்டும்-என்றார். (ச-55)




## மரக்கறி விலை வீழ்ச்சி; விவசாயிகள் பாதிப்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 12
தென்மராட்சிப் பிரதேச சந்தைகளில் மரக்கறி வகைகளின் விலைகள் சடுதியாக வீழ்ச்சியடைந்துள்ளதால் உள்ளூர்உற்பத்தியாளர்கள் பொருளாதார நெருக்கடியையும் நட்டத்தையும் எதிர்கொண்டுள்ளனர். கடந்த வாரம் கிலோ 500 ரூபாவுக்கு மேல் விற்பனையான மரக்கறி வகைகள் நேற்று கிலோ 100 ரூபாவாக வீழ்ச்சியடைந்துள்ளது. அனர்த்தங்களுக்குப் பின்னர் விவசாயிகள் பெரும் சிரமத்துக்கு மத்தியில் மீண்டும் பயிர்ச்செய்கையை மேற்கொண்டு தற்போது அறுவடை செய்யும் நிலையை எட்டியுள்ளனர். விளைச்சலைச் சந்தைக்குக் கொண்டுசெல்வதற்கான போக்குவரத்துச் செலவும் அதிகரித்துள்ளது. பயிர்களுக்கு நீர் இறைப்பதற்கான இயந்திரங்களுக்குப் பயன்படுத்தப்படும் எரிபொருள் செலவும் அதிகரித்துள்ளதால், உற்பத்திச் செலவைக் கூட ஈடுசெய்ய முடியாதுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். (ச-9)

## போதைப்பொருளுடன் கனடா தம்பதியர் கைது

கொழும்பு, மார்ச் 12
கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக இலங்கைக்குப் பெருந்தொகையான 'குஷ்' போதைப்பொருளைக் கடத்தி வந்த கனடா நாட்டுத் தம்பதியினர் சுங்கப் பிரிவு அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
கைதுசெய்யப்பட்டவர்கள் கனடாவின் அல்பர்ட்டா பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது. கைதுசெய்யப்பட்டவர்களிடமிருந்து 32 கோடி ரூபா பெறுமதியான 32 கிலோகிராம் 159 கிராம் எடையுடைய 'குஷ்' போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேகநபர்கள் மீட்கப்பட்ட போதைப்பொருள்களுடன் மேலதிக விசாரணைகளுக்காக விமானநிலைய பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ச-இ)

## ஈரானியர்கள் உடல்களை ஒப்படைக்க உத்தரவு



காலி, மார்ச் 12
காலி மருத்துவமனையில் இரண்டு நடமாடும் குளிரூட்டப்பட்ட அறைகளில் வைக்கப்பட்டுள்ள 84 ஈரானிய மாலுமிகளின் உடல்களை ஈரானிய தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைக்குமாறு காலி பிரதம நீதவான் சமீர தொடங்கொட நேற்றுக் காலை காலி மருத்துவமனையின் பணிப்பாளருக்கு உத்தரவிட்டுள்ளார். காலித் துறைமுக காவல்துறையினர் காலி பிரதம நீதவான் நீதிமன்றத்தில் விடுத்த கோரிக்கையைத் தொடர்ந்து நீதவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். (ச-இ)

## போராட்ட எதிரொலி; 12,000 மின்தடைகள்

கொழும்பு, மார்ச் 12
இலங்கை மின்சாரசபையின் தொழிற்சங்கத்தினர் முன்னெடுத்துள்ள தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக நாடு முழுவதும் 12,000க்கும் மேற்பட்ட இடங்களில் மின்சாரத் தடைகள் ஏற்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.
இரவு வேளைகளில் ஏற்பட்ட இந்த மின்சாரத் தடையால், முக்கியமான நகரங்கள் பல இருளில் மூழ்கின. கம்பஹா, களுத்துறை, இரத்தினபுரி, பேருவளை, புத்தளம், அநுராதபுரம் ஆகிய பகுதிகள் பாதிப்பை எதிர்கொண்டிருந்தன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)




## ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே கண்ணா

ஆடுற மாட்டை ஆடிக் கறக்கோனும், பாடுற மாட்டைப் பாடிக் கறக்கோனும் எண்டு முந்தின ஆக்கள் அடிக்கடி சொல்லுவினம். ஒவ்வொருத்தரையும் எங்கட வழிக்குக் கொண்டுவாறதுக்கு ஒவ்வொரு வழிமுறை தேவைப்படும். அந்த வழிமுறை என்னெண்டு கண்டுபிடிச்சால், ஆரையும் எங்கட வழிக்குக் கொண்டந்திடலாம்.

அப்பிடி தங்களுக்கு ஏத்தமாதிரி ஆக்களை வழிக்குக் கொண்டுவாறதில அயல்நாட்டுக்காரர் ஸ்பெசலிஸ்ட். அவையள் தங்களுக்குத் தேவைப்படுற ஆக்களிட்டப் போய் நேரடியா 'எங்களுக்கு சப்போர்ட்டா எழுதுங்கோ, நடவுங்கோ' எண்டெல்லாம் சொல்லமாட்டினம். என்ன குடுத்தால் மடங்குவினம் எண்டு கணிச்சு, அதுக்கேத்தபடி அவைக்கு விருந்து குடுப்பினம், தாங்கள் நடத்துற நிகழ்ச்சியளில தலைப்பா கட்டி முன்னுக்கு விடுவினம், ஸ்கொலர்ஷிப்பில போய் படியுங்கோ எண்டு தங்கட நாட்டுக்கு அனுப்பிவைப்பினம். இப்பிடி அவை வைக்கிற ஐஸில உச்சிமுதல் உள்ளங்கால்வரை குளிர்ந்து போய், 'மீளா அடிமை உமக்கே இனி ஆளாயினோம்' எண்டு அயல்நாட்டு எம்பஸி வாசலிலை பிரதட்டை அடிச்சுக்கொண்டு இருப்பினம். அப்பிடி விதவிதமான புல்லுக்கட்டுகளைக் காட்டியும் அடங்காத காளையாத் திரியிறவையை அடிமாடா மாத்துறதுக்கு அயல்நாட்டுக்காரர் எடுத்திருக்கிற இப்பத்தைய ஆயுதம் தான் 'பத்துநாள் பயிற்சிப் பட்டறை'.

இந்தப் பயிற்சிப்பட்டறை அவையின்ர நாட்டில இருக்கிற, தொழினுட்பத்துக்குப் பேர்போன நகரத்தில நடக்கும். இஞ்சையிருந்து கொண்டுபோறவையை அங்க பத்துநாளும் நல்ல ஏசி ஹொட்டலில வைச்சிருந்து உபசரிச்சு, அந்தப் பயிற்சி, இந்தக் களப்பயணம் எண்டு மண்டையைக் கழுவி கையில கொஞ்சக் காசும் குடுத்து அனுப்பி வைப்பினம். கரும்பும் தின்ன வைச்சு கைக்கூலியும் குடுத்தால், அதுக்குப் பிறகு அயல்நாட்டுக்காரர் சொன்னபடி தானே ஆடோனும். பிறகென்ன,'ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே கண்ணா?' கதைதான். கொஞ்சநாளா மீடியாக்காரரை இப்பிடிப் பயிற்சிப் பட்டறை எண்டு கூட்டிக்கொண்டு போச்சினம். அந்த மீடியாக்காரரும் அந்தப் பயிற்சிப்பட்டறையால வந்த நாளில இருந்து ஒரே அயல்நாட்டுப் புராணமாவே பாடிக்கொண்டிருக்கினம். மெல்ல மெல்ல அயல் நாட்டுக்காரரில எங்கட சனத்துக்கு இருக்கிற வெறுப்பை இல்லாமல் செய்யிறதுதான் அவைக்கு குடுக்கப்பட்ட வேலை அந்த வரிசையில இப்ப உள்ளூராட்சி சபையலின்ர மேயர், தவிசாளர், உறுப்பினர்கள் எண்டு கொஞ்சப்பேரைக் கொண்டுபோயிருக்கினம். அவையள் திரும்பி வரேக்க, அயல்நாட்டுக்காரரின்ர அதிதீவிர விசுவாசியளா மாறித்தான் வருவினம்.அவையும் வந்தவுடன அயல்நாட்டுக்காரரின்ர தாளத்துக்கு எங்கட அரசியலில ஆடுற அழகையும் இனிப் பாக்கலாம் கண்டியளோ.

padsi@uthayan.com -பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நிலத்தடி நீராதாரம் யாழில் கலந்தாய்வு

யாழ்ப்பாணம்,மார்ச் 12

வடமாகாண நீர்வளம் பேணுவதற்கான பேராய்வுச் செயற்றிட்டத்தினரின் ஏற்பாட்டில், நிலத்தடி நீராதாரம் தொடர்பான கலந்துரையாடல், யாழ்.கந்தர்மடத்தில் அமைந்துள்ள எங்கட புத்தகங்கள் இல்ல மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. சுவீடன் பல்கலைக்கழகத்தின் ஓய்வுநிலைப் பேராசிரியர் ந.சிறீஸ்கந்தராஜா தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில், பேராதனைப் பல்கலைக்கழக விவசாய பீடத்தின் இளைப்பாறிய மூத்த விரிவுரையாளர் கலாநிதி.செல்வராஜா பத்மராஜா, 'யாழ்ப்பாண நிலத்தடி நீரின் நீடித்த நிலைத்திருப்பும், நீர் தொடர்பில் இலங்கை முழுவதிலிருந்தும் கற்ற பாடங்களும்' எனும் தலைப்பில் யாழ்ப்பாணம் மற்றும் இலங்கையின் ஏனைய பிரதேசங்களின் நீராதாரம் தொடர்பில் பல்வேறு உதாரணங்களுடன் விளக்கமாக எடுத்துரைத்தார். கலந்துரையாடலில் நீர் வாண்மையாளர்கள், நீர் ஆர்வலர்கள், கல்வியியலாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-66)

# கௌரவிப்பும் கலைநிகழ்வும்

யாழ்ப்பாணம், மார்ச் 12

ஸ்ரீ வீரபத்திரர் ஆலய அறநெறிப் பாடசாலை முன்னெடுக்கும் மாணவர் கௌரவிப்பும் ஆன்மிகக் கலைநிகழ்வுகளும் எதிர்வரும் 14ஆம் திகதி சனிக்கிழமை பி.ப. 2மணிக்கு சாவகச்சேரி சிவன் கோவில் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளன. அறநெறிப் பாடசாலை அதிபர் ச.குமரதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிப் பிரதேச செயலாளர் எவ்.சி.சத்தியசோதியும், சிறப்பு விருந்தினர்களாக காரைநகர் பிரதேச செயலாளரும் அறநெறிப் பாடசாலையின் பழைய மாணவியுமான ரஞ்சனா நவரத்தினம், சாவகச்சேரி நகராட்சிமன்றத் தவிசாளர் வ.ஸ்ரீபிரகாஸ், மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயத்தின் அதிபர் ம.லினாஷ்குமார் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக தென்மராட்சிப் பிரதேச செயலக இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சிவமணி வசந்தகுமார், நுணாவில் மேற்கு கிராம சேவை உத்தியோகத்தர் ப.பிரதீபன், சாவகச்சேரி சிவஸ்ரீ. கு.ரிஷாங்கக் குருக்கள், சாவகச்சேரி நகராட்சிமன்ற உறுப்பினர் மு.கோகுலராஜ், பத்திரகாளி சமேத வீரபத்திரர் ஆலய பரிபாலன சபைத் தலைவர் கு.பிறேம்குமார் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (எ-41-159)

## குளுக்கோமா...

இணைந்து இந்த நடைபயணத்தை நடத்தவுள்ளன. வண்ணார்பண்ணை சிவன் கோவிலுக்கு முன்பாக, இன்று காலை 7 மணிக்கு ஆரம்பமாகும் இந்த நடைபயணம் எஸ்.ரி.எஸ். மருத்துவமனைவரை முன்னெடுக்கப்படவுள்ளது.

குளுக்கோமா (கண் அழுத்த நோய்) என்பது கண் விழித்திரையில் இருந்து மூளைக்கு தகவல்களைக் கொண்டு செல்லும் பார்வை நரம்பை பாதிக்கும் ஒரு தீவிர கண் நோயாகும். இது கண்ணின் உள்விழி அழுத்தம் அதிகரிப்பதால் ஏற்படுகிறது. சரியான நேரத்தில் சிகிச்சை அளிக்காவிட்டால், இது பார்வை இழப்பு அல்லது நிரந்தர குருட்டுத்தன் மைக்கு வழிவகுக்கும், இதனால்தான் இந்த நோய் 'மௌனமான பார்வைத்திருடன்' என்றும் அழைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-க)

# உலக அமைதி அருள்க

*"அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர், ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர்"(மத் 5:9)*

பழிக்கு பழி, இரத்தத்துக்கு இரத்தம், ஏவுகணைக்கு ஏவுகணை இதுவே இன்று வீட்டையும், சமுதாயத்தையும், உலக நாடுகளையும் உலுக்கிக் கொண்டிருக்கும் அச்சநிலையாக மாறியுள்ளது. தத்தமது ஆதிக்கத்தையும், பலத்தையும், நவீன தொழில்நுட்பப் போர்க்கருவிகளின் செயல்வீச்சையும் நிரூபிக்கும் களமாக இன்று பூமி மாற்றப்பட்டுள்ளது. மனித உயிர்கள் மீதான அக்கறை கவனக்குவிவற்ற தாக்குதல்களால் மனிதம் கொல்லப்படுகிறது. உலகைப் படைத்த இறைவன் அனைத்தையும் நல்லதெனக் கண்டு தம் உருவில் மனிதரைப் படைத்து ஆசி வழங்கி "பல்கிப்பெருகி உங்கள் ஆற்றலுக்குட்படுத்தி அனைத்தையும் ஆளுங்கள்" என்றார்.(தொ.நூ 1:26-28)

எதையும் அழிக்கும் அதிகாரத்தை இறைவன் மனிதனுக்குக் கொடுக்கவில்லை. உலக ஆட்சி அதிகார வல்லரசுப் போட்டிகளில் சிக்குண்டு பலியாவோர் அப்பாவி மக்கள் என்பதை ஆளுவோர் மறந்துவிடுகின்றனர். இன்றைய தவக்கால சூழலிலே இறைவனின் சாயலாகப் படைக்கப்பட்ட மனிதர்கள் அழிவுறுவதைத் தடுக்கவும், உலக அமைதிப் பந்தாகத் திகழவும் ஆட்சியாளர்களின் இதயங்களை இறைவன் தொடவேண்டும். வன்முறைகளைக் கைவிட்டு அமைதியை ஏற்படுத்தி கடவுளின் மக்களாகும் பேறுபெற்றவர்களாக உருமாற்றம் பெற செபத்தில் நிலைத்திருப்போம்.

**எஸ்.யேசுதாஸ்**
**கொழும்புத்துறை**

# குருதிக்கொடையாளர் கௌரவிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 12

வல்வெட்டித்துறை இரத்ததான சங்கத்தின் ஊடாக 50 தடவைகளுக்கு மேல் குருதிக்கொடை வழங்கியவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு எதிர்வரும் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2மணிக்கு வல்வெட்டித்துறை நெடியகாடு கணபதி மஹால் திருமண மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. வல்வெட்டித்துறை இரத்ததானச் சங்கம் மற்றும் வல்வை பிச்சையப்பா குழுவின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது. இதன்போது நினைவுச்சின்னங்கள் வழங்கி மதிப்பளிக்கப்படவுள்ளது. வல்வெட்டித்துறை இரத்ததானச் சங்கத்தின் ஏற்பாட்டில் 85ஆவது இரத்ததான முகாமும் நெடியகாடு கணபதி மஹாலில் அன்றைய தினம் காலை 8.30 மணி முதல் பி.ப.2மணிவரை இடம்பெறவுள்ளது. (எ-41-100)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மற்றவர்களால் மறைமுகத் தொல்லைகளும், விமர்சனங்களும் ஏற்படக்கூடும். குடும்பத்தில் சிறு சங்கடம் ஏற்படக்கூடும் என்றாலும், அதனால் பாதிப்பு எதுவும் இருக்காது.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் உறவினர்கள் வருகையால் செலவுகள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சியான செலவாகவே இருக்கும்.

**மிதுனம்:** இன்று சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார்கள். அவர்கள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள்.

**கடகம்:** அனுகூலமான நாளாக இருக்கும். அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியக்கூடும். தந்தையின்மூலம் ஆதாயம் கிடைக்கும். சிலருக்கு வீண்செலவுகள் ஏற்படக்கூடும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். புதிய முயற்சி சாதகமாகமுடியும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த பணம் இன்று கிடைக்கக்கூடும்.

**கன்னி:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாளாக அமையும். குடும்பத்துடன் கோயிலுக்குச் சென்று வழிபடுவீர்கள். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**துலாம்:** சாதிக்கும் நாளாக அமையும். வாழ்க்கைத்துணையால் எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்குமேல் தொடங்குவது நல்லது. வெளியூர்ப் பயணங்களைத் தவிர்த்துவிடவும். பிற்பகலுக்கு மேல் காரியங்களில் அனுகூலம் உண்டாகும்.

**தனுசு:** உற்சாகமான நாள். கணவன்–மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளுக்காக செலவு செய்ய நேரும்.

**மகரம்:** புதிய முயற்சிகளையும் பயணங்களையும் தவிர்க்கவும். சிறிய அளவில் உடல்நலம் பாதிக்கப்பட்டாலும், உரிய சிகிச்சையினால் உடனே சரியாகிவிடும்.

**கும்பம்:** மகிழ்ச்சி தரும் நாள். கணவன்–மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**மீனம்:** எடுத்த காரியம் அனுகூலமாகமுடியும். உறவினர்கள்வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



# கொதிநிலையின் ஆரம்பப்புள்ளி...!

மத்திய கிழக்குப் போர் இலங்கையின் பொருளாதாரத்தை ஆட்டம் காண வைத்திருக்கின்றது. தேர்தல் முடிவுகள் ஒன்றன் பின்னர் ஒன்றாக வெளிவருவதைப் போன்று விலையேற்ற அறிவிப்புகள் வெளிவர ஆரம்பித்துள்ளன. நேற்றுமுன்தினம் அனைத்துவகை எரிபொருள்களிலும் ஆரம்பித்த விலையேற்றம் நேற்று எரிவாயுவரை விரிவடைந்துள்ளது. மேலும் சில விலையேற்ற வதைகள் எதிர்வரும் இரவுகளில் வெளிவரலாம் என்ற பொதுவான கருத்துகளும் வலுவாக முன்வைக்கப்பட்டு வருகின்றன. உலகளாவிய போர்ப் பதற்றங்கள் என்று வரும்போது விலையேற்றங்கள் தவிர்க்கமுடியாதவைதான். ஆயினும், சகட்டுமேனிக்கு எகிறியிருக்கும் விலைகள் கொஞ்சம் நிலைதடுமாறவே வைக்கின்றன. வெளிப்படையாகக் கூறுவதாயின், எதிர்காலத்தின் மீது நிச்சயமற்ற தன்மையை இவை ஏற்படுத்தியுள்ளன.

எரிபொருளின் விலைகளில் ஏற்பட்ட சடுதியான உயர்வு, அதனுடன் 'சங்கிலித் தொடர்புடைய' இதர துறைகளிலும் கணிசமான அதிர்வுகளை ஏற்படுத்த ஆரம்பித்துள்ளன. பேருந்துக் கட்டணங்களை அதிகரிக்கவேண்டும் என்று கோரிக்கை உடனடியாக விடுக்கப்பட்டுள்ளது. ஓட்டோக் கட்டணமும் அதிகரிக்கக்கூடிய சாத்தியப்பாடுகள் ஏற்பட்டுள்ளன. அதேநேரம் இந்த விலையேற்றங்கள் இத்துடன் நின்றுவிடுமா என்று கேட்டால், இல்லை என்பதே தெளிவான பதில். எரிவாயுவின் விலைகள் அதிகரித்ததால் பாண் உட்பட சிற்றுண்டிகளில் விலைகள் கணிசமாக அதிகரிக்கும். முன்னாள் ஜனாதிபதி கோத்தாபயவின் காலத்தில், சடுதியான விலையேற்றங்கள் எவ்வாறு மக்களைக் கொன்று தின்றனவோ அவ்வாறானதொரு நிலையே தற்போது ஏற்பட்டுள்ளது. அன்றைய நெருக்கடி உள்நாட்டின் அடிப்படையில் அமைந்தது. தற்போதைய நெருக்கடி சர்வதேசத்தின் பாற்பட்டது. அவ்வளவே.

'தக்கனபிழைக்கும்' என்ற டார்வினின் கோட்பாடுதான் இனி இலங்கையின் எதிர்காலமா? என்ற கேள்வி எழுவது தவிர்க்கமுடியாததாகின்றது. ஏனெனில், இந்த விலையேற்றங்கள் 'முடிவிலியானவை'. மத்திய கிழக்கில் போர் ஓய்ந்தாலன்றி இது இத்துடன் நிற்கப்போவதில்லை. சர்வதேச நெருக்கடிகள் மேலும் அதிகரிக்கையில், அடுத்ததாக இன்னொரு சுற்று விலையேற்றம் நடைமுறையாகும். அது, இன்னொரு பொருண்மிய மட்டத்தைச் சேர்ந்தோரை இரையாக்கும். பின்னர் இது தொடர்கதையாகும். ஒரு மரத்தை ஆக்கிரமித்து கொஞ்சம்கொஞ்சமாக அதை வழித்துத் துடைக்கும் கறையான்கள் போல இந்த விலையேற்றங்களும் கொஞ்சம் கொஞ்சமாக இந்தத் தீவில் உள்ள பல பொருண்மிய மட்டத்தைச் சேர்ந்தோரையும் அழித்தொழிக்கத்தான் போகின்றன.

தற்போதைய நெருக்கடி நிலைமை, ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் சக்திக்கு அப்பாற்பட்டது என்பது உண்மை. இதில் அவர்கள் தீர்மானத் தரப்புகள் அல்லர். இருப்பினும், 'சர்வதேச நெருக்கடிதானே' என்ற ஒற்றைச்சொல்லில் இதை அவர்கள் கடந்துவிட முடியாது. ஏனெனில், உள்நாட்டுப் பொறிமுறை உயர்மட்டத்தில் பேணப்பட்டிருப்பின், இந்த விலையேற்றங்களை இவ்வளவு விரைவாக நடைமுறைப்படுத்தவேண்டிய தேவை எழுந்திருக்காது. கோத்தாபய அரசாங்கத்துக்கு எதிரான கொதிநிலையின் ஆரம்பப்புள்ளிகூட இவ்வாறே அமைந்தது. ஆதலால், அநுர அரசாங்கத்துக்கு மாற்றுத்திட்டங்கள் அவசியமே.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



## பொய்யாமொழி

**ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்**

**பொருள்:** தன் மகனை நற்பண்பு நிறைந்தவன் எனப் பிறர் சொல்லக் கேள்வியுற்ற தாய், தான் அவனைப் பெற்ற காலத்து உற்ற மகிழ்ச்சியைவிடப் பெரிதும் மகிழ்வாள்.



# சுங்கத் திணைக்களத்துக்கு நவீன தரவுக் கட்டமைப்பு!

*2.1 பில்லியன் ரூபா ஒப்பந்தம்*

**கொழும்பு, மார்ச் 12**

**இலங்கை சுங்கத் திணைக்களத்தின் தரவுச் செயலாக்கம் மற்றும் பகுப்பாய்வுத்திறனை மேம்படுத்தும் நோக்கில், அதிநவீனக் கட்டமைப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய மென்பொருள் உரிமங்களைக் கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.**

தொழில்நுட்ப மதிப்பீடுகளின் அடிப்படையில் தகுதிபெற்ற நிறுவனமொன்று வரி நீங்கலாக சுமார் 2.1 பில்லியன் ரூபா பெறுமதியில் இந்த ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது.

அடுத்த 8 ஆண்டுகாலத்துக்கு இந்தக் கொள்வனவு மற்றும் பராமரிப்பு ஒப்பந்தம் நடைமுறையில் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## ஏற்றுநீர்ப்பாசனம் மூலம் 400 ஏக்கரில் சிறுதானியம்

கிளிநொச்சி,மார்ச் 12

இரணைமடுக்குள ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தின் மூலம், 400 ஏக்கரில் சிறுதானியம் மற்றும் உப உணவுப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான கலந்துரையாடல் கரைச்சிப் பிரதேச செயலர் தவச்செல்வம் முகுந்தன் தலைமையில் இரணைமடு கமக்காரர் அமைப்புகளின் சம்மேளனக் கட்டடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. குறித்த கலந்துரையாடலில் கிளிநொச்சி கிழக்கு நீர்ப்பாசனப் பொறியலாளர் கே.பிரகாஸ்,மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர், மாவட்ட கமநல காப்புறுதிச்சபை உதவிப்பணிப்பாளர், கிராம அலுவலர், விவசாயிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (கு-113)

## 2016க்குப் பின்னர் இணைந்த அரச ஊழியருக்கு ஓய்வூதியம்

2016ஆம் ஆண்டுக்குப் பிறகு அரச சேவையில் இணைந்த அனைத்து அதிகாரிகளுக்கும் மீண்டும் ஓய்வூதிய உரிமையை உறுதிப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். முந்தைய தீர்மானங்களால் 2016 இன் பின் இணைந்தவர்களுக்கு ஓய்வூதியம் இரத்துச்செய்யப்பட்டிருந்தது. கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்டதீர்மானத்தின்படி 2016க்குப் பிறகு பணியில் இணைந்த அனைவருக்கும் முறையான ஓய்வூதியத்திட்டம் மீண்டும் நடைமுறைப்படுத்தப்படும்.

புதிய அரசாங்கம் பதவியேற்றவுடன் அரச ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்தியதோடு, எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் அதனை மேலும் அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## மெல்பேர்னுக்கு அதிகரிக்கப்படவுள்ள விமான சேவைகள்

ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ், கொழும்பு மற்றும் அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகருக்கு இடையிலான விமான சேவைகளை அதிகரிக்கத்தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் ஓகஸ்ட் 2ஆம் திகதி முதல் கொழும்பு-மெல்போர்ன் நகருக்கு இடையே வாரத்துக்கு 10 விமானசேவைகள் இயக்கப்படவுள்ளன.

அவுஸ்திரேலியாவிலிருந்து இலங்கைக்கு வரும் சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில், இந்தச் சேவை விரிவாக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் தெரிவித்துள்ளது. (எ-இ)

## வாகன இலக்கத் தகடுகள்; அச்சிடப் புதிய ஒப்பந்தம்


யாழ்ப்பாணம், மார்ச் 12

கடந்த பத்து மாதங்களாக இடைநிறுத்தப்பட்டிருந்த மோட்டார் வாகனங்களுக்கான இலக்கத் தகடுகளை அச்சிடும் பணிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்காக புதிய தனியார் நிறுவனமொன்றுடன் 3 பில்லியன் ரூபா பெறுமதியான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் கமல் அமரசிங்க, வீதிப் போக்குவரத்து மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் மற்றும் தனியார் நிறுவனத்தின் பிரதிநிதிகள் முன்னிலையில் இந்த உடன்படிக்கை எட்டப்பட்டது. குறித்த நிறுவனத்துக்கு அடுத்த ஐந்து ஆண்டு காலத்துக்கு இந்த ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, ஏப்ரல் இறுதியில் அல்லது மே மாத முற்பகுதியில் புதிய இலக்கத் தகடுகள் விநியோகிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ச-இ)

நாளை
வெள்ளிக்கிழமை - மாசி 29
13.03.2026
சுபநேரம் : 06.22 - 07.52
ராகுகாலம் : 10.52 - 12.22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அராலி சரஸ்வதி இந்துக்கல்லூரியின் இல்ல திறனாய்வுப் போட்டியை முன்னிட்டு நடத்தப்பட்ட வீதியோட்டப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அதிபர் கு.பாலமுருகன் தலைமையில் இடம்பெற்றது. இதில் விருந்தினர்களாக உடற்கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கத் தலைவர் ப.தர்மகுமாரன், ஆசிரியர் பே.தயாபரன், கட்டடஒப்பந்தகாரர் பா.பாலச் சந்திரன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப் பித்தனர். (ச)



தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி கல்லூரி யின் மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடை பெற்றது. (க-27,66)



பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி, ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவிகளுக்குப் பதக்கம் அணிவித்து, சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (க-100)



சாவகச்சேரி சங்கத்தானை மீனாட்சி அம் பாள் கோவில் வருடாந்த பெருந்திரு விழாவின் தேர்த்திருவிழா அண்மையில் பக்திபூர்வமாக இடம்பெற்றது. (ச-9)



புங்குடுதீவு பிரதேச முதியோர்களுக்கான இலவச மருத்துவ முகாம் புங்குடுதீவு அம்பலவாணர் அரங்கில் உதவிப் பிர தேச செயலர் திருமதி பாமா மோகன முரளி தலைமையில் அண்மையில் நடைபெற்றது. (ச-9)





## புத்தளம் ஆலயத்துக்கு விக்கிரகங்கள் வழங்கல்

புத்தளம்.மார்ச் 12

புத்தளம் அம்மாதோட்டம் பள்ளிவாசல் துறையில் அமைந்துள்ள ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்துக்கு, சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தினரால், புதிய விக்கிரகங்கள் வழங்கப்பட்டன. 6 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆசனக்கல்லுடன் கூடிய புதிய விக்கிரகங்கள் இவ்வாறு வழங்கப்பட்டுள்ளன. சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள், ஆச்சிரமத் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று குறித்த விக்கிரகங்களை வழங்கினார். பெரும்பான்மையினச் சிங்கள மக்களும், இஸ்லாம் சமயத்தைப் பின்பற்றுவோரும் அதிகளவில் வாழ்கின்ற பள்ளிவாசல்துறைப்பகுதியில், அன்றாடம் கூலியைத் தொழிலாகக் கொண்ட 40 சைவக் குடும்பங்கள் வசிக்கின்றன. இவர்களின் தனித்துவமான பண்பாடு மற்றும் சமூகவியல் அடையாள வழிபாட்டுக்கான ஒரேயொரு ஆலயம் இதுவெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-66)





அராலி வள்ளியம்மை வித்தியசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப்போட்டி, கல்லூரியின் மைதானத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. (க-27)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org






# 90 மில்லியன் ரூபா செலவில் நவீன விவசாயப் பண்ணை!

## கிளிநொச்சியில் திறப்பு

**கிளிநொச்சி, மார்ச் 12**

**தற்போதைய அரசாங்கத்தின் 'வளமான கிராமம்' திட்டத்தின்கீழ், கிளிநொச்சி மாவட்டம் கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பிரமந்தனாறுப் பகுதியில் நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய விவசாயப் பண்ணை நேற்றுமுன் தினம் திறந்துவைக்கப்பட்டது.**


கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் ஊடாக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் மற்றும் ஜப்பான் அரசின் நிதி மற்றும் தொழில்நுட்ப ஆதரவுடன் சுமார் 90 மில்லியன் ரூபா செலவில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தினூடாக தெரிவுசெய்யப்பட்ட 25 விவசாயிகளுக்குத் தலா 10 ஏக்கர் அளவிலான அரச காணியில் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. காலநிலை மாற்றங்களுக்குத் தாக்குப் பிடிக்கக் கூடிய நவீன விவசாய முறைகளைப் பின்பற்றுவதே இதன் பிரதான நோக்கமாகும். கண்டாவளைப் பிரதேச செயலாளர் த. பிருந்தாகரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் பேராசிரியர் உபாலி பன்னிலகே பண்ணையைத் திறந்தார். நிகழ்வில் வட மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகம், கிளிநொச்சி மாவட்டச் செயலர் சுப்பிரமணியம் முரளிதரன், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரின் இணைப்பாளர், பல அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-113,55)

## சிறுவனின் படுகொலைக்கு நீதி வேண்டிப் போராட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 12

அல்லைப்பிட்டியில் பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்த, அ.அருள்பயஸ் என்ற சிறுவனின் படுகொலைக்கு நீதி வேண்டி, ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையம் முன்பாக நேற்றுமுன்தினம் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. மனித உரிமை ஆர்வலர் அமைப்பினரால் முனெடுக்கப்பட்ட போராட்டத்தில், சிறுவனின் உறவினரும் பங்கேற்றனர். போராட்டத்தில் பொலிஸாருக்கு எதிரான வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியிருந்தனர்.

கடந்த மாதம் 10ஆம் திகதி அதிகாலை 1.15 மணியளவில் வேலணை அல்லைபிட்டிப் பகுதியில் பொலிஸாரின் உத்தரவை மீறி, தப்பிச்செல்ல முற்பட்ட .ஹைஏஸ் ரக வாகனம் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில், 17 வயதுடைய சிறுவன் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (க-27)



## தென்மராட்சி லயன்ஸ் கழகத்தால் 7,000 தென்னங்கன்றுகள் வழங்கல்

யாழ்ப்பாணம், மார்ச் 12

லயன்ஸ் மாவட்டம் 306 D12, தென்மராட்சிக் கிழக்கு லயன்ஸ் கழகத்தின் ஒழுங்கமைப்பில், 7 ஆயிரம் தென்னங்கன்றுகள், தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன.

2 இலட்சம் தென்னங்கன்றுகள் வழங்கும் செயற்றிட்டத்தின் ஊடாக, தென்னை அபிவிருத்தி மற்றும் பயிர்ச்செய்கை சபையுடன் இணைந்து, கொடிகாமம் மத்தி, கொடிகாமம், சுட்டிபுரம் வரணி மற்றும் கைதடி தெற்கு, நாவற்குழி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பயனாளிகளுக்கு கன்றுகள் வழங்கப்பட்டன. நிகழ்வில் லயன்ஸ் கழகத்தினர், தென்னை அபிவிருத்திச் சபையினர், பிரதேச செயலகப் பிரிவு உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள், பயனாளிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-159)

## உடுவில் மகளிர் கல்லூரி பூப்பந்தாட்டத்தில் வெற்றி

யாழ்ப்பாணம், மார்ச் 12

வலிகாமம் கல்வி வலயத்தால் நடத்தப்பட்ட வலயமட்டப் பெருவிளையாட்டுப் போட்டியின் பூப்பந்தாட்டப்போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி சம்பியன் பெற்றுள்ளது.

குறித்த போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரியின் 18 வயதுப்பிரிவு முதலாமிடத்தையும், 16 வயதுப்பிரிவு இரண்டாமிடத்தையும் பெற்று மாகாணமட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளன. (ச-27)








## மாணவர்கள் கௌரவிப்பு

மன்னார், மார்ச் 12

வடக்கு மாகாணத்தில் கடந்த வருடம் இடம்பெற்ற மாகாண மட்ட மற்றும் தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்ற மடுக் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை மாணவர்களைக் கௌரவிக்கும் விளையாட்டு வர்ணங்கள் நிகழ்வு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மடு வலயத்தில் இடம்பெற்றது. மடு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி ஏ.சி.வொலன்ரைன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி கலாசார விவகாரங்கள் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் எம். பற்றிக் டிராஞ்சனும், கௌரவ விருந்தி னராக மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் கே.செல்வனும், சிறப்பு விருந்தினராக அந்தனி கேப்ரியலும், மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், பழையமாணவர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர். தேசிய ரீதியில் சாதனை படைத்த இரண்டு மாணவர்களும், மாகாண மட்டத்தில் வெற்றிபெற்ற 102 மாணவர்களும், செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வில் வெற்றிபெற்ற 72 மாணவர்களும், விசேட தேவைகளுக்குட்பட்ட மாணவர்களுக்கான நிகழ்வில் வெற்றிபெற்ற 6 மாணவர்களும் பதக்கம் அணிவிக்கப்பட்டு பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (எ-41)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org







வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி, கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.(சு-27)



தெல்லிப்பழை பாலர் ஞானோதய சபை மாணவர்களுக்கான சைவசமயப் பாடநூல்கள், கதைப்புத்தகங்கள், மாணவர் ஆசிரியர் பதிவேடு என ஒருதொகுதி நூல்கள் இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் தெல்லிப்பழைப் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் ஊடாக கடந்த திங்கட்கிழமை வழங்கப்பட்டன. (எ-41-66)



தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி மகளிர் அணியின் ஏற்பாட்டில் 'பெண்ணின் நிமிர்வே மண்ணின் நிமிர்வு' எனும் தொனிப்பொருளிலான மாபெரும் சர்வதேச மகளிர் தின எழுச்சி நிகழ்வு நல்லூர் கிட்டுப் பூங்காவில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது. நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி மேனகா சிவகரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். இதன்போது மகளிர் தினப் பிரகடன உரை, பல்வேறு கலைநிகழ்வுகள், மகளிர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியடைந்தோருக்கான பரிசளிப்பு நிகழ்வுகள் என்பன இடம்பெற்றன. (எ-41-66)



பேரறிஞர் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் முப்பொன் விழா நினைவு மலர் வெளியீட்டு நிகழ்வு கடந்த ஞாயிற்றுக் கிழமை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள அமலமரித் தியாகிகளின் மாகாண இல்லமாகிய தொடர்பகத்தில் ஆசிரிய ஆலோசகர் யோண்சன் ராஜ்குமார் தலைமையில் நடைபெற்றது. யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம், யாழ்ப்பாணம் மறைமாவட்ட அலுவலகம், யாழ் மாகாண அமலமரித் தியாகிகள் சபை ஆகியவற்றின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. (ச-66)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் 40ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகபீடத்தில் அதி சிறப்புத் தரத்தில் 7 தங்கப் பதக்கங்களைப் பெற்ற தங்கராசா ஜஸ்மின் யூலிற்றாவை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு அச்சுவேலி வடக்கு சனசமூக நிலையத்தில் அண்மையில் இடம் பெற்றது. (ச-23)



'பெண்களின் வலிமை துணிவு மற்றும் சாதனைகளைக் கொண்டாடுவோம்' எனும் கருப்பொருளில் சர்வதேச மகளிர் தின நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை மன்னாரில் இடம்பெற்றது. மன்னார் நகர சிறுவர் பூங்கா அரங்கில் மன்னார் குடிசார் அமைப்புகளின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்ட பகுதி பெண்கள் அமைப்புகள் கூட்டாக இணைந்து இந்த நிகழ்வை முன்னெடுத்திருந்தன. (ச-56)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மின்சாரசபையை தனியார்மயமாக்கவில்லை!

## வலுசக்தி அமைச்சர் விளக்கம்

**கொழும்பு, மார்ச் 12**

**இலங்கை மின்சாரசபை கலைக்கப்பட்டு புதிய நிறுவனங்கள் உருவாக்கப்பட்டமை தொடர்பில் மின்சாரசபை தனியார்மயமாக்கப்படுவதாகக் கூறப்படும் செய்திகளில் உண்மையில்லை. அதன் உரிமம் தொடர்ந்தும் அரசாங்கத்திடமே இருக்கும் என்று வலுசக்தி அமைச்சர் குமார ஜயகொடி தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

மின்சாரசபையின் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ள நான்கு அரச நிறுவனங்கள் மற்றும் இரண்டு இணை நிறுவனங்கள் ஆகியவை 100 வீதம் அரசாங்கத்துக்குச் சொந்தமான பங்குகளைக் கொண்டவை. இந்த நிறுவனங்களின் பொறுப்புகள் அனைத்தும் திறைச்சேரிக்குச் சொந்தமான அரச நிறுவனங்களிடமே வழங்கப்பட்டுள்ளன. இது நிர்வாக ரீதியான மாற்றமே தவிர, நிறுவனத்தைத் தனியார் வசம் ஒப்படைக்கும் நடவடிக்கை அல்ல. மறுசீரமைப்பினால் ஊழியர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. சேவையில் தொடர விரும்பும் ஊழியர்கள் புதிய நிறுவனக் கட்டமைப்புக்குள் உள்வாங்கப்படுவார்கள். சொந்தக் காரணங்களுக்காக ஓய்வுபெற விரும்பியவர்களுக்கு, அவர்களின் சேவைக்காலத்தை அடிப்படையாகக் கொண்டு போதிய இழப்பீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

சுமார் 42 மின்சாரத் தொழிற்சங்கங்களுடன் கடந்த ஓராண்டாகப் பேசி, அவர்களின் யோசனைகளும் இந்த மறுசீரமைப்பில் உள்வாங்கப்பட்டுள்ளன.

நட்டத்தில் இயங்கும் மின்சார சபையை மீட்டு, அதன் உச்சப் பயனை மக்களுக்கு வழங்கவேண்டும் என்பதே எமது நோக்கம். கட்டமைப்பில் மட்டுமே மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இது பொதுமக்களுக்கு மிகவும் வினைத்திறனான சேவையை வழங்கும்-என்றார். (ச-இ)



# திறைசேரியில் 750 பில்லியன் விலை உயர்வுகள் எதற்காக?

## *ஹர்ஷ டி சில்வா கேள்வி*

கொழும்பு, மார்ச் 12

தற்போது திறைசேரியில் போதுமான உபரி நிதி கையிருப்பில் உள்ள நிலையில், உலகச் சந்தையில் ஏற்படும் திடீர் மாற்றங்களுக்காக உடனடியாக உள்நாட்டில் எரிபொருள் விலையை உயர்த்தி மக்கள் மீது சுமையை ஏற்றுவதை அரசாங்கம் தவிர்க்கவேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

அரசாங்கம் நினைத்தால் எரிபொருள் விலையேற்றத்தால் ஏற்படும் பாதிப்பைக் குறைக்க முடியும். ஒரு லீற்றர் எரிபொருள் மீது சுமார் 118 ரூபா நேரடி வரி மற்றும் அதற்கு மேல் வற் வரி அறவிடப்படுகிறது. குறுகிய காலத் தீர்வாக இந்த வரிகளைக் குறைப்பதன் மூலம் விலையேற்ற அதிர்ச்சியில் இருந்து மக்களைப் பாதுகாக்கலாம். திறைசேரியில் தற்போது சுமார் 750 பில்லியன் ரூபா உபரி நிதியுள்ளது. உலகச் சந்தையில் ஏற்படும் தற்காலிக விலை உயர்வுகளைச் சமாளிக்க இந்த நிதியைப் பயன்படுத்துவதே புத்திசாலித்தனமான தலைமைத்துவமாகும்.

நாட்டில் வறுமை மட்டம் கடந்த காலங்களில் 12 சதவீதத்திலிருந்து 25 சதவீதமாக அதிகரித்துள்ளது. எரிபொருள் விலை உயர்வால் சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழிற்றுறைகளும் சாதாரண நடுத்தர வர்க்கக் குடும்பங்களும் கடுமையாகப் பாதிக்கப்படும்.

விலைச் சூத்திரத்தைப் பயன்படுத்துவதை நான் எதிர்க்கவில்லை; ஆனால், இக்கட்டான சூழலில் மக்களின் சுமையைக் குறைக்க அரசாங்கம் தன்னிடம் உள்ள ஏனைய கருவிகளைப் பயன்படுத்தவேண்டும். முறையான பொருளாதாரச் சீர்திருத்தங்கள் என்பது மக்களின் முதுகெலும்பை உடைப்பதாக இருக்கக்கூடாது-என்றார். (ச-இ)

# யாழ்.மாநகர முதல்வர் ஹைதராபாத் பயணம்

இந்தியா.மார்ச் 12

உள்ளூராட்சிசபைப் பிரதிநிதிகளுக்கான விசேட செயலமர்வில் பங்கேற்பதற்காக, யாழ்.மாநகர முதல்வர் திருமதி வி.மதிவதனி கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்தியாவிலுள்ள ஹைதராபாத்துக்குப் பயணமாகியுள்ளார். இந்தச் செயலமர்வில் பங்கேற்பதற்காக, இலங்கை தமிழரசுக் கட்சியிலிருந்து10 உள்ளூராட்சி சபைகளின் பிரதிநிதிகள் இந்தியாவுக்குப் பயணித்துள்ளனர்.

இந்தியாவின் ஹைதராபாத்தில் உள்ள தேசிய கிராமிய அபிவிருத்தி மற்றும் பஞ்சாயத்து ராஜ் (கிராமசபை) நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 10 நாள் செயலமர்வில் இவர்கள் பங்கேற்கவுள்ளனர். (கு-இ)



# அரசின் முறையற்ற திட்டமிடலால் மக்கள் மீது பொருளாதாரச் சுமை!

## *நாமல் தெரிவிப்பு*

கொழும்பு, மார்ச் 12

அரசாங்கத்தின் தூர நோக்கற்ற திட்டமிடல்கள் மற்றும் நிர்வாக ரீதியான பலவீனங்கள் காரணமாக நாட்டின் பொருளாதாரச்சுமைகள் அனைத்தும் மக்கள் மீதே சுமத்தப்படுகின்றன என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள கட்சித் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரித்துள்ளதாவது-

தேவையான எரிபொருள் கையிருப்பில் உள்ளதாக ஜனாதிபதியும் அமைச்சரும் உறுதியளித்திருந்த நிலையில், திடீரென விலை உயர்த்தப்பட்டிருப்பது அரசாங்கத்தின் முரண்பாடான போக்கைக் காட்டுகிறது.

நிலக்கரிக் கொள்வனவில் இடம்பெற்ற முறைகேடுகள் மற்றும் ஊழல்களால் ஏற்பட்ட நட்டத்தை ஈடுகட்டவே, அரசாங்கம் மக்கள் மீது இந்த விலை உயர்வுச் சுமையை ஏற்றியுள்ளது. நெல்லுக்கு நியாயமான விலையைத் தீர்மானிக்க அரசாங்கம் தவறியுள்ளது. உள்நாட்டு உற்பத்தியாளர்களைப் பாதுகாப்பதை விடுத்து, வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யும் கொள்கையையே அரசு முன்னுரிமைப்படுத்துகிறது. மக்களின் அத்தியாவசியத் தேவைகளுக்கான தீர்வுகளை வழங்க அரசாங்கம் முன்வரவேண்டும்-என்றார். (ச-இ)

# மத்திய கிழக்குப் பதற்றத்தினூடாக மறைக்கப்படும் நிர்வாகத் தவறுகள்

## *ஜி.எல். பீரிஸ் தெரிவிப்பு*

கொழும்பு, மார்ச் 12

அரசாங்கத்தின் தவறான நிர்வாகத்தால் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சிக்கல்களை மறைப்பதற்காக, மத்திய கிழக்கில் நிலவும் போர்ச்சூழலை ஒரு கேடயமாக அரசாங்கம் பயன்படுத்தி வருகின்றது என்று முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் குற்றஞ்சுமத்தியுள்ளார்.

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களான உதய கம்மன்பில, நிமல் சிறிபால டி சில்வா, லசந்த அழகியவன்ன மற்றும் அனுர பிரியதர்ஷன யாப்பா உள்ளிட்ட அரசியற்தலைவர்கள் மற்றும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட விசேட கலந்துரையாடலின் பின்னர் அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

அரசாங்கத்தின் பிழையான திட்டமிடல்களால் ஏற்பட்ட நெருக்கடிகளுக்கு, மத்திய கிழக்கு மோதல்களைக் காரணம் காட்டித் தப்பிக்க அரசாங்கம் முயற்சிக்கிறது.

நடுத்தர வர்க்கத்தினரை மிகக் கடுமையாகப் பாதிக்கும் வகையில் எரிபொருள் விலை உயர்த்தப்பட்டுள்ளது.



இதன் சமூகப் பாதிப்புகள் குறித்து அரசாங்கம் எவ்வித ஆய்வுகளையும் மேற்கொள்ளவில்லை. சர்வதேச ரீதியில் நிலவும் இக்கட்டான சூழ்நிலையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் போக்கை அரசாங்கம் கைவிட வேண்டும். பலமான எதிர்க்கட்சி இருந்தால் மட்டுமே அரசாங்கத்தைத் தவறான பாதையில் செல்லவிடாமல் தடுத்து, சரியான முறையில் வழிநடத்தமுடியும் -என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவைகருதிய...

களை நடைமுறைப்படுத்துமாறு வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

வடக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம், வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்றுப் புதன்கிழமை மாலை வடமாகாண ஆளுநர் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு மாகாணத்தில் சேவையின் தேவை கருதி ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட இடமாற்றங்களை முழுமையாக நடைமுறைப்படுத்திய பின்னரே, வருடாந்த இடமாற்றங்களை நடைமுறைப் படுத்த வேண்டும். இடமாற்றங்கள் மேன்முறையீடு காரணமாக நிறுத்தப்பட்டால் அந்த வெற்றிடத்துக்குப் பதிலாக உடனடியாக மாற்று இடமாற்றத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். இந்த வருடத்துக்கான இடமாற்றத்தில் எவ்வித விட்டுக்கொடுப்பும் இருக்காது. இடமாற்றம்பெற்ற ஆசிரியர்களை விடுவிக்கத் தவறும் பாடசாலை அதிபர்களுக்கு எதிராக உடனடியாகஒழுங்குநடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டும். சில ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கு எதிரான விசாரணைகளைக் காரணம் காட்டி அவர்களின் ஓய்வூதியம் இழுத்தடிக்கப்படுகின்றது. 'தவறு செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்தும் இல்லை. எனினும், தவறு இழைக்காதவர்கள் தமக்குரிய காலத்தில் எவ்விதத் தாமதங்களுமின்றித் தமது ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொள்வதை அதிகாரிகள் உறுதிப்படுத்தவேண்டும்.

வடமாகாண பண்பாட்டுப் பெருவிழாவை இந்த ஆண்டு செப்ரெம்பர் மாத இறுதிக்குள் நிறைவு செய்யும் வகையில் பிரதேச மற்றும் மாவட்ட மட்டப் பண்பாட்டுப் பெரு விழாக்களை முன்கூட்டியே நடத்தி முடிப்பதற்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் உரிய நடவடிக்கைகளை உறுதி செய்ய வேண்டும் - என்றார்.

(அ-ம-26-66)

## தென்மராட்சியில்...

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒரு வீட்டின் மீதும், கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 4 வீடுகள் மீதுமே நேற்று அதிகாலை 1.30 மணி தொடக்கம் 3 மணிவரையான நேரப் பகுதிக்குள் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

சாவகச்சேரி பொலிஸ் பிரிவிலுள்ள மீசாலை மேற்கு வங்களா வீதியிலுள்ள வீட்டுக்குள் புகுந்த வன்முறைக் குழுவினர், அந்த வீட்டின் உடைமைகளை அடித்து உடைத்துச் சேதப்படுத்தியதுடன், பல சொத்துகளைத் தீக்கிரையாக்கி யுள்ளனர்.

அதன்பின்னர், கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீசாலை தட்டான்குளம் வீதியில் இரண்டு வீடுகள் மீது பெற்றோல் குண்டுகள் வீசி தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தத் தாக்குதலில் ஒரு வீடு பெருமளவில் சேதமடைந்ததுடன், மினிபஸ் ஒன்றும், மோட்டார்சைக்கிள் ஒன்றும் தீயில் எரிந்து அழிந்துள்ளன.

அத்துடன், கொடிகாமம் ஞானவைரவர் வீதியிலுள்ள வீடொன்றிலும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அந்த வீட்டைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் வாளால் வெட்டிக் காயப்படுத்தப்பட்டுள்ளார். இதனையடுத்து, மீசாலை வடக்குக் கிழக்கு ஊறொல்லையிலுள்ள வீடொன்றிற்குள் புகுந்த குழுவினர், அங்கிருந்த இரண்டு கார்கள், பட்டா ரக வாகனம் மற்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றையும் அடித்து நொறுக்கியுள்ளனர். தகவலறிந்து ஒன்றுதிரண்ட கிராமத்து இளைஞர்கள், வன்முறைக் குழுவைச் சேர்ந்த நால்வரை மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். ஏனையவர்கள் தப்பியோடி நிலையில், அவர்களைக் கைதுசெய்யும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. சம்பவ இடங்களுக்கு நேற்றுச் சென்ற தடயவியல் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தனர்.

(அ-ம-28-26)

## பாம்பு...

வராவார். வயலைப் பார்வையிடச் சென்றபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. மல்லாவி மருத்துவமனையில் சடலம் வைக்கப்பட்டுள்ள நிலையில், மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-35)


### வேலையாட்கள் தேவை

கொழும்பு, கிளிநொச்சி, பருத்தித்துறை மற்றும் வவுனியா நகரில் அமைந்துள்ள PPT நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.

- முகாமையாளர்
- அலுவலக உதவியாளர்
- பேருந்து நடத்துனர்
- காசாளர்

(உணவு மற்றும் தங்குமிட வசதிகள் வழங்கப்படும்.)

கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு:077 386 6250

(CS 60866) J-1


### மரண அறிவித்தல்

திருச்சிலுவைக் கன்னியர் சபையைச் சார்ந்த அருட்சகோதரி

**மரியற்றா குலாஸ்**




அவர்கள் நேற்று (11.03.2026) புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார். இவரது ஆன்ம இளைப்பாற்றித் திருப்பலி யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் இன்று (12.03.2026) வியாழக்கிழமை பி.ப 3.00 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா மறுவாழ்வு முற்றத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

பிறப்பு 17.09.1942

இறப்பு 11.03.2026

தகவல்:
மாகாணத் தலைவி
திருச்சிலுவை
கன்னியர் சபை

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



கடந்த 21.02.2025 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

**அமரர் தம்பையா அழகரத்தினம்**

தோற்றம் 25.05.1937

மறைவு 21.02.2025

அன்பாய் அரவணைத்து
அறிவுரைகள் பல கூறி விகடமாய் பேசி
எமையெல்லாம் மகிழ்வித்துவிட்டு
எங்கு சென்றீர்கள் அப்பா ....
ஓர் ஆண்டு என்ன ஆண்டுகள் பல
சென்றாலும் என்றும் உங்கள்
நினைவுகள் எம் நெஞ்சை விட்டகலாது
உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

(CS/31429) J-1

குடும்பத்தினர்.

### யாழ்ப்பாணம் மாநகர சபை
### சாரதிகளை நாட்கூலி அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கான கூறுவிலை கோரல் - 2026

மாநகர சபையின் தேவைகருதி வெளிவாரியாக 10 சாரதிகளை நாட்கூலி அடிப்படையில் மாநகரசபைக்கு தேவைப்படும் நேரங்களில் வழங்கக்கூடிய சேவை வழங்குநரிடமிருந்து 9 மாத காலத்திற்கான (01.04.2026 - 31.12.2026) விண்ணப்பங்கள் யாழ்மாநகரசபை பிராந்திய பெறுகைக்குழு தலைவரால் கோரப்படுகின்றன.

மேற்படி சேவையை வழங்கக்கூடியவர்கள் கேள்விப் படிவங்களை 12.03.2026 - 25.03.2026 வரையான காலப்பகுதியில் கடமை நாட்களில் மு.ப 9.00 மணி முதல் பி.ப 2.00 மணி வரை மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 1000.00 + Vat 18% பணமாகச் செலுத்தி விண்ணப்பங்களை பெறுகை முகாமைத்துவப் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம். ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை தொலைபேசி இல - 0212222275, மின்னஞ்சல் முகவரி - mcjaffnamailv@ yahoo.com மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவங்களை கடித உறையினுள் உள்ளடக்கி 26.03.2026 ஆம் திகதி மு.ப 11.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, மாநகரசபை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு நேரில் / பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'சாரதிகளை நாட்கூலி அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கான கூறுவிலை' என தவறாது குறிப்பிடப்படல் வேண்டும். கேள்விகள் 26.03.2026 ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு கேள்விதாரர் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

தலைவர்,
பிராந்திய பெறுகைக்குழு,
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





## பொன்...

ஆரம்பமாகவுள்ளது. வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில், இன்று, நாளை, நாளைமறுதினம் என மூன்று தினங்களைக் கொண்டதாக இந்தப் போட்டி நடைபெறவுள்ளது.

பொன் அணிகளின் போரில் இதுவரை, யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 35 தடவைகளும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி 17 தடவைகளும் வெற்றிபெற்றுள்ளன. 31 போட்டிகள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தன. மிகுதிப் போட்டிகளின் விவரம் கிடைக்கப்பெறவில்லை.

சென். பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கு பி.மதுசனும், யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கு ஆர்.யு.ஜோன்சனும் தலைமை தாங்குகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-20)

## உணவுகளின்...

விலைகளும் நேற்று நள்ளிரவிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கம் இது தொடர்பில் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

எரிவாயுவின் விலை அதிகரிக்கப்பட்டதால் உணவகங்கள் நெருக்கடி நிலையை எதிர்கொண்டுள்ளன. இந்த நிதி நெருக்கடியை நிவர்த்தி செய்யும் வகையில் தேநீர், பால்தேநீர், சிற்றுண்டிகள் மற்றும் இதர உணவுகளின் விலைகளை அதிகரிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இதன்படி, சாதாரண தேநீர் 5 ரூபாவாலும், பால்தேநீர் 10 ரூபாவாலும், சிற்றுண்டிகள் 10 ரூபாவாலும், சோற்றுப் பார்சல் 25 ரூபாவாலும் அதிகரிக்கப்படும். சமையல் எரிவாயு விலை உயர்வால் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடியைக் கருத்திற்கொண்டே இந்த விலை உயர்வு அமைந்துள்ளது. எரிவாயுவின் விலையில் மாற்றம் ஏற்பட்டால், உணவுப் பொருள்களின் விலைகள் தொடர்பில் மறுபரிசீலனைகள் இடம்பெறும் - என்றார். (அ-ம)

## மருமகன்...

மனையில் சேர்க்கப்பட்டுள்ளார். கரவெட்டி மத்தி, கரவெட்டியை சேர்ந்த யோகராசா சரஸ்வதி (வயது-66) என்பவரே சம்பவ இடத்தில் உயிரிழந்தவராவார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

அபிவிருத்தி உத்தியோகத்தராகப் பணியாற்றும் மருமகனுக்கும் மாமனாருக்கும் இடையில் நீண்டகாலமாகக் குடும்பத்தகராறு இருந்து வந்துள்ளது. இதையடுத்து, அவர்களைப் பழிவாங்கும் நோக்கில் அந்த நபர் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய வீதியில் உள்ள தனது வீட்டுக்குள் மனைவியுடன் இரண்டு பிள்ளைகளை வைத்துப் பூட்டியுள்ளார். மனைவி மீது கத்திக்குத்துத் தாக்குதல் நடத்த முயன்றபோது, அந்தப் பெண் அவரைத் தள்ளிவிட்டுள்ளார். பிள்ளைகள் ஒருவாறு கதவைத் திறந்து தப்பியோடிய நிலையில், அந்தப் பெண்ணும் தப்பியோடி, அனைவரும் அருகிலிருந்த கடையொன்றுக்குள் தஞ்சமடைந்துள்ளனர். இதையடுத்து கொலைவெறி மிகுதியால் அந்த நபர், கரவெட்டியில் உள்ள மாமனார் வீட்டுக்குச் சென்று அங்கு தனிமையில் இருந்த தனது மாமியாரை வெட்டிப் படுகொலை செய்துள்ளார். இதன் பின்னர், கிராமக்கோடு பகுதியில் பழச்சாறு கடையில் நின்ற மாமனாரைத் தேடிச் சென்று அவர்மீதும் சரமாரியான வாள்வெட்டுத் தாக்குதலை நடத்தியுள்ளார்.

கை, கழுத்து, தலை, முதுகுப் பகுதிகளில் கோரமான முறையில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. சந்தேகநபர் சம்பவ இடத்திலிருந்து தப்பிச்சென்ற நிலையில், பொதுமக்கள் பொலிஸாருக்கு உடனடியாகத் தகவல் வழங்கியுள்ளனர். இதையடுத்து, 15 நிமிடங்களுக்குள் பருத்தித்துறைப் பொலிஸாரால் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

பருத்தித்துறைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரியந்த அமரசிங்க தலைமையில் இடம்பெற்ற மேலதிக விசாரணையின்போதே, தனது மாமியாரை வெட்டிக்கொன்ற விடயத்தை அவர் கூறியுள்ளார். இதன்பின்னரே இந்தப் படுகொலை தொடர்பில் பொலிஸாருக்குத் தெரியவந்துள்ளது. இதையடுத்து சடலம் மீட்கப்பட்டு பருத்தித்துறை மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டது. சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-100-26)

## லாப்ஸ்...

அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன்படி, 12.5 கிலோகிராம் சமையல் எரிவாயுவின் விலை 300 ரூபாவாலும், 5 கிலோகிராம் சமையல் எரிவாயு கொள்கலனின் விலை 120 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

விலைத் திருத்தத்துக்கு அமைய, 12.5 கிலோகிராம் சமையல் எரிவாயு கொள்கலனின் விலை 4 ஆயிரத்து 630 ரூபாவாகவும், 5 கிலோகிராம் சமையல் எரிவாயு கொள்கலனின் விலை ஆயிரத்து 862 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

## கிவில்...

வவுனியா, யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்கள் சார்ந்த நீரியல் வளங்களுடன் தொடர்புடைய விவகாரங்கள் குறித்து ஆராயும் கூட்டம், நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கே.டி.லால்காந்த தலைமையில் வவுனியாவில் இன்று நடைபெறவுள்ளது. வவுனியா மாவட்டச் செயலகத்தில் காலை முதல் மாலை வரை இடம்பெறும் இந்தக் கூட்டத்திலேயே, கிவுல் ஓயா தொடர்பில் விரிவான மீளாய்வு இடம்பெறும் என நம்பகரமாகத் தெரியவருகின்றது.

வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் முன்னெடுக்கப்படவுள்ள கிவுல் ஓயா நீர்ப்பாசனத் திட்டம் தமிழர்களின் பூர்வீக நிலங்களை ஆக்கிரமித்தும், இனப்பரம்பலை மாற்றும் நோக்கிலும் இடம்பெறுகின்றது என தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும், சிவில் அமைப்பினரும் சுட்டிக்காட்டி வருகின்றனர். இவ்வாறான நிலையிலேயே, இந்தக் கூட்டம் தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்ததாவது:-

வவுனியா, யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்கள் சார்ந்த நீரியல் வளங்களுடன் தொடர்புடைய விவகாரங்கள் சம்மந்தமாக வவுனியாவில் நாளை (இன்று) கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. ஒரு விடயதானம் குறித்து ஆராய்வதற்கென இவ்வாறு காலை முதல் மாலை வரை விசேட கூட்டங்கள் இதுவரை இடம்பெற்றதில்லை. எனவே, இந்தக் கலந்துரையாடல் மிகவும் முக்கியமானது. இந்தக் கலந்துரையாடலில், சர்ச்சைக்குரிய கிவுல் ஓயாத் திட்டம் குறித்து முழுமையாக ஆராயப்படும் - என்றார். (அ-ம-110)

## மாணவர்களிடம்...

வடமாகாணத்தில் உள்ள பல பாடசாலைகளில், மாணவர்களிடம் இருந்து தற்போதும் சட்டவிரோதமான முறையில் பணம் அறவிடப்படுகின்றது எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் மீளாய்வுக் கூட்டம், ஆளுநர் செயலகத்தில் நேற்று மாலை இடம்பெற்றது. இதன்போதே, வடக்கு மாகாணத்தில் உள்ள அனேகமான பாடசாலைகளில், மாணவர்களிடம் இருந்து சட்டவிரோதமான முறையில் கட்டணங்கள் அறவிடப்படுகின்றன என்ற விடயம் தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டு, அது தொடர்பில் விவாதங்கள் இடம்பெற்றன.

இதன்போது, வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்ததாவது:

இலவசக் கல்வி நடைமுறையில் உள்ள போதிலும் பாடசாலைகளில் ஏதாவது ஒரு வழியில் மாணவர்களிடம் பணம் அறவிடும் செயற்பாடுகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. இது தொடர்பில் எனக்குத் தினமும் பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. சில பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள், குறிப்பிட்ட சில பெற்றோர் ஊடாகப் பணத்தை அறவிடும் செயற்பாட்டை முன்னெடுத்துவிட்டு அதற்கும், தமக்கும் எவ்விதத் தொடர்புமில்லை என நழுவப் பார்க்கின்றனர்.

வலயக் கல்விப் பணிப்பாளர்கள் பாடசாலைகளுக்குத் திடீர்க் களப்பயணங்களை மேற்கொள்ள வேண்டும். அங்கு பதிவு செய்யப்படாமல் அன்பளிப்புக்கள் பெறப்பட்டிருப்பது கண்டறியப்பட்டால் உரிய விசாரணைகளை மேற்கொண்டு அதிபர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். வலயக் கல்விப் பணிப்பாளர்கள் இந்த விடயத்தில் இறுக்கமான நடவடிக்கைகளை எடுத்தால் மாத்திரமே இத்தகைய சட்ட விரோதச் செயல்களைக் கட்டுப்படுத்த முடியும் - என்றார். (அ-ம-26-66)

## வழக்குகளுக்கு...

எதிராகப் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி மேற்கொள்ளப்பட்ட நிதி மோசடி உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்களுக்கு எதிராகவே இவ்வாறு பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. சந்தேகநபர்கள் இன்னும் ஒரு மாதத்துக்குள் நீதிமன்றத்தில் முன்னிலையாகத் தவறினால், அவர்களின் சொத்துக்களை முடக்கவும் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. நீதிமன்றத்தின் உத்தரவு தொடர்பான அறிவித்தல், பொலிஸாரால் சந்தேக நபர்களின் வசிப்பிடங்களிலும் பொது இடங்களிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன், இது தொடர்பில் சந்தேக நபர்கள் வசிக்கும் பகுதிகளில் ஒலிபெருக்கி வழியாகவும் பொலிஸார் அறிவித்தல்களை மேற்கொண்டுள்ளனர். (அ-ம-20)

## ஆளுநர்...

முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது. வேலணைப் பிரதேசசபையின் உறுப்பினரும், தீவக முன்னேற்றக் கழகத் தலைவருமான சுவாமிநாதன் பிரகலாதன் என்பவரால் இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மண்டைதீவில் சுற்றுலா அமைச்சால் உருவாக்கப்பட்ட 'எக்கோ ரூறிசம்' திட்டம் தோல்வியடைய அன்றிருந்த அரச அதிகாரிகளே காரணமெனக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுவரும் நிலையில் இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

முறைப்பாட்டில் அன்றைய யாழ். மாவட்டச் செயலராகவிருந்த நாகலிங்கம் வேதநாயகன், அன்றைய காலப்பகுதியில் வேலணைப் பிரதேச செயலாளர்களாகவிருந்த சுகுணரதி தெய்வேந்திரம் மற்றும் அ.சோதிநாதன் ஆகியோருக்கு எதிராகவே இந்த முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது. இவர்களால் 77 மில்லியன் ரூபா நிதி இழப்பு ஏற்பட்டுள்ளதாக முறைப்பாட்டாளர் தனது முறைப்பாட்டில் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-ம-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## ஆறுமுகம் முருகேசு

**(ஓய்வு நிலை பிரதேச சபை அலுவலர் பச்சிலைப்பள்ளி)**

**மலர்வு** **உதிர்வு**

**06.10.1945** **27.02.2026**



அரசர்கேணி பளையைப் பிறப்பிடமாகவும், இத்தாவில் பளையை வசிப்பிடமாகவும், கனடா ரொறன்ரோவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் முருகேசு அவர்கள் கடந்த (27.02.2026) வெள்ளிக் கிழமை கனடா ரொறன்ரோவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - கதிராசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான கந்தையா - பூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும், அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற செல்லம்மா மற்றும் சுப்பிரமணியம், நடராசா, காலஞ்சென்றவர்களான இராசலட்சுமி, சொக்கலிங்கம் மற்றும் வேல்முருகு, சிவராசா, தங்கவேலு (ஓய்வுநிலை அதிபர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், குலவீரசிங்கம் (பிரதேச சபை உறுப்பினர்), காலஞ்சென்ற மகேந்திரராணி, மற்றும் சுந்தரலிங்கம் (ஓய்வு நிலை பிரதி அதிபர்), கணேசலிங்கம், சித்திரா, தவமணி (பரிசாரக உத்தியோகத்தர்), கிருஸ்ணலிங்கம் ஆகியோரின் மைத்துனரும், மனோகரி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் - வலயக் கல்வி அலுவலகம் - கிளிநொச்சி வடக்கு), யமுனா (லண்டன்), குமுதினி (குடும்பநல உத்தியோகத்தர் - போதனா வைத்தியசாலை - யாழ்ப்பாணம்), சசிகலா (தாதிய உத்தியோகத்தர் - போதனா வைத்தியசாலை - யாழ்ப்பாணம்), கோபிகா (சட்டத்தரணி - கிளிநொச்சி மாவட்ட / நீதவான் நீதிமன்றம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சொர்க்கலிங்கம் (பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் - கொடிகாமம்), சத்தியசீலன் (லண்டன்), கேதீஸ்ராஜன், மனோகரன் (கனடா), டினேசன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சுலக்கிகா, பஜிந்தன், சானியா, துசாரா, ஆதிரா, தேவானுயன், விகர்னி, அக்சரன், ஆருஷி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.03.2026) வெள்ளிக்கிழமை அவரது நிரந்தர வசிப்பிட முகவரியான A9 வீதி, இத்தாவில், பளையில் நடைபெற்று, பிற்பகல் 3.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பொடுகேணி குருடிகாடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

**தகவல்: குடும்பத்தினர்**

**A9 வீதி, இத்தாவில்,**
**பளை**

**077 324 0748**
**077 670 1610**
(CS/60949) J-1 **077 654 4366**



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.03. 2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org